“ஒருவர் பெற்ற கல்வி என்பது மற்றவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு இந்த சமூகத்தையும் உலகத்தையும் தான் பிறந்த போது இருந்த நிலையை விட உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் அறிவைத் தருவது”

என்ற அமெரிக்க மக்கள் உரிமைப்போராளி மரியன் ரைட் எடில்மேன் அவர்களின் கருத்திற்கேற்ப, தமிழ்ச்சமூகத்தை கல்வியிலும், சமூக நிலையிலும், தான் பிறக்கும்போது இருந்தநிலையைவிட உயர்த்திக் காட்டியவர் தலைவர் கலைஞர். கல்வி என்பது கட்டட வகுப்பறைகளில் கற்றுக்கொள்வது மட்டும் இல்லை. கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு காலமெல்லாம் கற்றுக்கொண்டே இருப்பதற்கு சமூகத்தில் நிறைய இருக்கிறது. அப்படி கிடைத்தநேரத்திலெல்லாம் கற்றுக் கொண்டே இருந்தவர் தலைவர் கலைஞர். பட்டப்படிப்பு பெறவில்லை ஆயினும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா என்ற இருபெரும் பல்கலைக்கழகங்களில் இருந்து அவர் பெற்றுக் கொண்ட சமூக அரசியல் பட்டங்கள் அதிகம்.

அகில இந்திய அளவில் எழுத்தறிவு 67% ஆக இருக்கும்போது தமிழ்நாட்டில் 80.09%ஆக இருக்கிறது. 1965ல் 37.01%ஆக இருந்த எழுத்தறிவு 2023ல் 80.09% சதவீதமாக வளர்ந்து வந்திருப்பதன் பின்னணியில், தலைவர் கலைஞரின் அதிகரிக்க ஆரம்பித்தது. குறிப்பாக, பெண் பிள்ளைகள் பள்ளிக்கு வருவதும் அதிகரித்தது.

இரண்டாவதாக, ஆரம்பப் பள்ளிக்குள் நுழைந்த இந்தக் குழந்தைகளை இடைநிலைக் கல்வி வரைக்குமாவது கொண்டு வந்து விட வேண்டும் என்று நினைத்த தலைவர் கலைஞர், ஆண்பிள்ளைகளை படிக்க வைக்க நினைத்த தமிழ்ச்சமூகம் பெண்கல்விக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதை உணர்ந்து பெண்பிள்ளைகளைப் படிக்க வைப்பதை ஊக்கப்படுத்தும் விதமாக ஜூன் 3, 1989ல், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் கல்வி உதவித்தொகைத் திட்டத்தை அறிவித்தார். அதன்படி, எட்டாம் வகுப்பு படித்த பெண்களுக்கு திருமண உதவித்தொகை ரூ.5000/என்று அறிவித்தார் தலைவர் கலைஞர். அது ரூ.10,000/, ரூ.25,000/ என்று வளர்ந்து இன்று கல்லூரியில் பயிலும் கல்லூரி மாணவியருக்கு மாதம் ரூ.1000/ கல்வி உதவித்தொகை என வளர்ந்திருக்கிறது. ‘கல்வியில் நாற்றங்கால்’என்று அழைக்கப்படும் ஆரம்பப் பள்ளிக் கல்விக்குள் மாணவியரை அழைத்து வந்து மெல்ல அவர்களை



அந்த இளைஞனுக்கு புரிந்தது. அவன் மனதிற்குள் தலைவர் கலைஞரின் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 20% இடஒதுக்கீட்டு ஆணைதான், தன்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் முதுகலை கணினிப் பொறியியல் பட்டதாரியாக்க வாய்ப்பு வழங்கியது என்பதை உணர்ந்து அவர் மீதான மரியாதையும், அதற்கான நன்றி விசுவாசத்தின் விளைவாக சமூக நீதிக்கான குரல்களில் தன் குரலையும் இணைத்துக் கொண்டான். அந்த இளைஞன் வேறு யாருமல்ல, இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் கான்ஸ்டன்டைன் எனும் நான்தான்.

இது போன்றே, அனைத்து சிறாருக்கும் 14 வயது வரை இலவச, கட்டாய தொடக்க கல்வி, மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண சலுகை, பன்னிரண்டாம் வகுப்பு வரை இலவச கல்வி, சமச்சீர் கல்வி, அரசு மேனிலைப்பள்ளிகளில் கணினிக் கல்வி,10 மற்றும் 12ஆம் வகுப்பில், தமிழினை ஒரு பாடமாக படித்து முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் மாணவர்களின் உயர்கல்விக்கான செலவை அரசே ஏற்கும் திட்டம், முதல் தலைமுறை மாணவர்களுக்கு

# முத்தமிழ் அறிஞரும், கல்வியில் சமூகநீதியும்!

பங்களிப்பு மகத்தானது. குறிப்பாக, இந்த சமூகத்தை கல்வி நோக்கி நகர்த்தியதில் பெரும்பங்களித்த முத்தான மூன்று திட்டங்களை இங்கு பார்க்கலாம். முதலாவதாக,தலைவர் கலைஞர் அரசு ஆரம்ப பள்ளிகளில் ஆசிரியைகளையே நியமிப்பதற்கான அரசாணை பிறப்பித்தபோது சில பேர் கண்ணுக்கு அது வாக்கு அரசியலாக தெரிந்தது. ஆனால் அடிப்படையில், அது நிறைய மாணவர்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அழைத்து வந்தது. நான் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தில், எங்கள் ஆரம்ப பள்ளியில் ‘மீசை வாத்தியார்’என்ற ஒரு கண்டிப்பான ஆசிரியர் இருந்தார். பெரிய மீசை, கரகரத்த குரல், கண்டிப்பான பார்வை என்று 10வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு அவர் பயமுறுத்துகிற பூச்சாண்டியாகவே தெரிவார்.

அதனாலேயே எங்கள் கிராமத்தில் சிலபல மாணவர்கள் பள்ளிக்கு வர பயந்தார்கள். வந்தவர்களில் சிலர், பாதியிலேயே ஓடிப் போனார்கள். ஆண் பிள்ளைகள் தாக்குப் பிடித்தாலும், பெரும்பாலான பெண் பிள்ளைகள்,‘பள்ளிக்கூட வாசலை மிதிப்பதில்லை’ என்று அடம்பிடித்து அழுவார்கள். அன்றைய சமூகமும், பெண் பிள்ளைதானே!, படிக்காவிட்டால் என்ன? என்று விட்டு விடுவார்கள். ஒழுக்கமும், கட்டுப்பாடும் கலந்த கல்வியை கற்றுத்தருவதுதான் ‘மீசை வாத்தியாரின்’ நோக்கம். அது உண்மைதான் என்றாலும், பயத்தில் சில பேர் பள்ளிக்கூடம் வராமல் போனதற்கு அவர் மீதான பயமே மறைமுக காரணம்.

அநேகமாக, 1970-80களில், பள்ளிக்கல்வி பயின்ற பலருக்கும் அவரவர் பள்ளிகளில் இப்படி ஒரு மீசை வாத்தியார் அனுபவம் இருந்திருக்கலாம். இதை உணர்ந்துதானோ என்னவோ, ஆரம்ப பள்ளிகளில் ஆசிரியைகளையே நியமிப்பதற்கான ஆணையைப் பிறப்பித்தார் தலைவர் கலைஞர். இதன் விளைவாக வீட்டில் தாயைப் பார்ப்பதைப் போலவே குழந்தைகள் பள்ளியில் ஆசிரியைகளைப் பார்த்தார்கள். அதனால் ஆரம்ப பள்ளிகளில் மாணவர் சேர்க்கைவிகிதம் மெல்ல மெல்ல மேல்நிலை, உயர்நிலை, பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு என்று இந்த தமிழ்ச் சமூகத்தை அழைத்து வந்ததற்கு விதை போட்டது தலைவர்



பேராசிரியர் **கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்**
கழக செய்தித் தொடர்புச் செயலாளர்

கலைஞரின் சீரியசிந்தனையில் உதித்த சிறப்பான கல்வித் திட்டங்கள்தான்.

மூன்றாவதாக, சமூக நீதியை நிலைநிறுத்தும் வண்ணம் கல்வியில்,கிராமப்புற மாணவர்களுக்கு 15% இடஒதுக்கீடு, மிக பிற்படுத்தபட்டோருக்கு 20% இடஒதுக்கீடு தந்து இலவச கல்வி தந்தது, அருந்ததியினருக்கு தனி இடஒதுக்கீடு, பழங்குடியினருக்கு 1% இடஒதுக்கீடு, அதிலும் குறிப்பாக, ஒற்றைச் சாளர முறையில் (1997-1998) கல்லூரி மற்றும் பாடப் பிரிவினைத் தேர்ந்தெடுக்கும் வகை கொணர்ந்தது மற்றும் மிக பிற்படுத்தப்பட்டோருக்கு 20% இடஒதுக்கீடு என்று நடைமுறைப்படுத்திய திட்டங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பிரிவினரிடையே கல்வி நோக்கிய சீர்மிகு பயணத்தைத் துரிதப்படுத்தியது. இந்த இடஒதுக்கீட்டு முறை கல்வியில் தேவை இல்லை என்று நினைத்த ஓர் இளைஞன் பின்னாளில் தனக்கே அது பயன்பட்ட போதுதான் அதன் அருமை புரிந்தது. எவ்வாறு எனில், அந்த இளைஞனும் அவன் நண்பனும், அண்ணா பல்கலைக்கழகத்தில் முதுகலை கணினிப் பொறியியல் (M.E. Computer Science) படிப்பதற்கு நுழைவுத்தேர்வு எழுதி, முறையே 31/50 மற்றும் 27.5/50 மதிப்பெண் பெற்றனர். அவர்கள் இருவரும் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் ஒரே கல்லூரியில் சேர அனுமதி கிடைத்தால்தான் முதுகலைப் படிப்பில் சேர்வது,

ஒருவருக்கு கிடைத்து, மற்றொருவருக்கு கிடைக்கவில்லை என்றால் முதுகலை பட்டப் படிப்பு படிப்பதில்லை என்று நட்பாய்ந்த ஒப்பந்தம் செய்து கொண்டனர். ஒற்றைச் சாளர மாணவர் சேர்க்கை முறையில், நினைத்த கல்லூரியில் இருந்த இரண்டே காலி இடங்களில், 31 மார்க் எடுத்த இளைஞனுக்கு முதலில் அனுமதி கிடைத்தது.

ஆனால், மீதமிருந்த அந்த ஒரு காலி இடம் இரண்டாவது மாணவனுக்கு கிடைக்குமா? கிடைக்காதா? படிப்போமா? படிக்க மாட்டோமா? என்ற பதற்றத்தில், இருவரும் ஒருவரை ஒருவர் பரிதவித்து பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் அந்த இரண்டாவது மாணவனின் பெயர் அழைக்கப்படும் வரை அது காலியாகவே இருந்தது. அது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீடு. நல் வாய்ப்பாக, அந்த மாணவன் அதே மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் என்பதால் சேர்க்கை அனுமதி கிடைத்தது. அப்போதுதான், மாணவர் சேர்க்கையில் இடஒதுக்கீட்டின் அருமை கல்விக் கட்டண சலுகை, கல்விக்கடன் ரத்து, பொறியியல் பட்டப்படிப்பிற்கான நுழைவுத்தேர்வு ரத்து, உயர்கல்வித்துறை உருவாக்கம், 43 சுயநிதி பொறியியல் கல்லூரிகள், 59 பல்தொழில்நுட்ப பயிலகங்கள், 67 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்க அனுமதி, மாவட்டங்கள் தோறும் அரசு மருத்துவமனைகளுடன் கூடிய அரசு மருத்துவக் கல்லூரிகளை நிறுவியது, அகில இந்திய அளவில், முதன் முதலில் அம்பேத்கர் பெயரில் சட்டக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகத்தை நிறுவியது, 12 அரசு பல்கலைக்கழகங்களை நிறுவியது, திருச்சியில் தேசிய சட்ட கல்லூரியை நிறுவியது, தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம் நிறுவியது, தொழிற்முறைக் கல்வியில் வருமான உச்ச வரம்புக்கு கீழ் உள்ள பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இலவச கல்வி இளம்கலை, பட்டப்படிப்பு வரை தந்தது, தாழ்த்தப்பட்டோருக்கு இலவச கல்வி தந்தது என்பன போன்றவை தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியில் தலைவர் கலைஞரின் பெரும்பங்கில் ஒரு சிறுபகுதி.

படிப்பை நோக்கி மாணவர்களை அழைத்து வந்த அதே நேரத்தில், படித்த இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்கிடும் வண்ணம் தமிழகத்தில், 1997ல், தகவல் தொழில்நுட்ப பூங்கா - டைடல் பார்க் மற்றும் ELCOT, IT Highway,சிறப்பு பொருளாதார மண்டலம், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற்பேட்டை நிறுவியது, தமிழ்நாடு தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் உருவாக்கம் போன்ற திட்டங்களை தலைவர் கலைஞர் செயல்படுத்திக் காட்டினார். கல்வி கற்க வந்தால் ஊக்கத்தொகை, உதவித்தொகை, படித்து பட்டம் பெற்றால் வேலை வாய்ப்பு என்று கல்வியின்பால் தமிழகம் சிறந்து விளங்குவதில் தலைவர் கலைஞரின் தொலை நோக்கு பார்வையும், சமூக சிந்தனை கலந்த கல்வி வளர்ச்சித் திட்டங்களும் ஏற்படுத்திய நேர்மறை மாற்றங்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கவை.



## முயற்சிகள் முழுப் பயனைத் தரவில்லை!

**கா**யும் கதிரவனை மறைக்கக் கையையே குடையாகக் கொண்டும், மழையில் ஒதுங்க மரத்தடியையே மாளிகையாகப் பாவித்தும், நமது மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆண்டவனின் புத்திரர்கள் என்று அன்பொழுக அழைக்கப்படுகிற அரிசனங்கள் எனப்படும் ஆதிதிராவிடர் லட்சோப லட்சம் பேர் வாழுகின்ற வீடுகள், குக்கிராமத்துக் குப்பைத் தொட்டிகளாக இருக்கின்றன.

உணவு வழங்கும் உழவன், மானங் காக்க உடை தரும் நெசவாளி, வியர்வைத் துளிகளை, தன்னைப் பெற்றெடுத்த இந்திய மண்ணுக்குப் பன்னீர்த் துளிகளாகத் தெளித்துக் கொண்டிருக்கும் தொழிலாளி, சுரங்கம் தோண்டுவோன், முத்துக் குளிப்போன், மீனவன் - உலைக் கூடத்தில் வதைபடுவோன் - மண் சுமப்போன் - மரம் ஏறுவோன் உடை வெளுப்போன் - முடி திருத்துவோன் - ஏதோ இரண்டெழுத்துப் படித்து, எழுத்தர் பணி புரிவோன் - இன்னோரன்ன மக்கள் தொகுதியினர் வாழ்விலே இன்பத் தென்றல் வீசிடவில்லை. அதற்காக முயற்சிகள் எடுக்கப்படாமல் இல்லை. ஆனால், அந்த முயற்சிகள், முழுப் பயனையும் அளித்திடத்தக்க வண்ணம் அமைந்திடவில்லை.

அய்ந்து பேருக்காகத் தயாரிக்கப்படும் விருந்து, பரிமாறப்படுகிற நேரத்தில் பத்துப் பதினைந்து பேருக்கு என்ற நிலை பெற்றுவிடுமேயானால், அதனை அருந்தி மகிழ்வதில் முழுமை எப்படி இருந்திட இயலும்?

- கலைஞர்